**மத்திய அரசின் அனுமதி அறிக்கை தமிழக அரசிடம் ஒப்படைப்பு**

# பரந்தூர் விமான நிலையத்திலிருந்து 4 ஆண்டுகளில் விமானங்கள் பறக்கும்

**சென்னை, ஆக. 9– மத்திய அரசின் ஆரம்ப கட்ட அனுமதி கிடைத்து இருக்கிறது. தமிழக அரசிடம் இதுகுறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. எனவே பரந்தூரில் 2028 ம் ஆண்டு விமானம் தரையிறங்கும். அதற்கான பணிகளில் தமிழக அரசு மும்முரம் காட்டி வருகிறது.**

நாடு முழுவதும் விமான போக்குவரத்து வேகமான வளர்ச்சி கண்டு வருகிறது. 2014ம் ஆண்டு இந்தியாவில் 6 கோடி பேர் விமானங்களில் பறந்துள்ளனர்.

கடந்த ஆண்டு (2023) இந்த எண்ணிக்கை 15.20 கோடி என்ற அளவில் உயர்ந்து உள்ளது. பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப விமான நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. அதிக பயணிகள் மற்றும் விமானங்கள் வந்து செல்வதில் டெல்லி, மும்பைக்கு அடுத்தப்படியாக சென்னை விமான நிலையம் 3வது இடத்தில் இருந்தது.

ஆனால் இப்போது பெங்களூரு, ஐதராபாத் விமான நிலையங்கள் சென்னையை விட முன்னேறி நம்மை 5வது இடத்திற்கு பின்னுக்கு தள்ளிவிட்டன.

அதற்கு முக்கிய காரணம், இந்த விமான நிலையங்கள் அனைத்து விரிவாக்கம் செய்யப்பட்டு உள்ளன. ஆனால் சென்னை விமான நிலையம் ஆண்டுக்கு 2.1 கோடி பயணிகளை கையாளும் திறன் மட்டுமே உள்ளது.

எனவே எதிர்கால தேவையை கருத்தில் கொண்டு தமிழக அரசு காஞ்சீபுரம் மாவட்டம் பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்கிறது. மொத்தம் 5 ஆயிரத்து 369 ஏக்கரில் சுமார் ரூ.30 ஆயிரம் கோடி செலவில் இந்த விமான நிலையம் அமைக்கப்பட உள்ளது. அதற்காக சுமார் 3 ஆயிரத்து 700 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட உள்ளன. மீதமுள்ள நிலம் 1,669 ஏக்கர் நிலம் அரசுக்கு சொந்தமானது.

நிலங்கள் கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த கிராம மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இருப்பினும் தமிழக அரசு எதிர்கால தேவையை கருத்தில் கொண்டு இந்த திட்டத்தை செயல்படுத்த மும்முரம் காட்டி வருகிறது.

இங்கு நிலம் கையகப்படுத்து வதற்கான ஆரம்ப கட்ட பணிகள் நடந்து வருகிறது. அதேவேளையில் விமான நிலையம் அமைப்பதற்கு தேவையான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த விமான நிலையம் அமைக்கும் பணியினை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் செய்து வருகிறது.

விமான நிலையம் அமைப்பதற்கான சுற்றுச்சுழல் அனுமதி, மத்திய பாதுகாப்பு அமைச்சகம், இந்திய விமானப்படை மற்றும் விமான ஆணையம் ஆகியவற்றின் ஆரம்ப கட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. பரந்தூர் விமான நிலைய பணிகளை 4 கட்டங்களாக செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு உள்ளது. முதல்கட்ட பணிகள் 2026ம் ஆண்டு தொடங்கி 2028ம் முடிக்கப்பட உள்ளது. அப்போது இங்கு ஆண்டுக்கு 2 கோடி பயணிகளை கையாள முடியும். 2ம் கட்ட பணிகள் 2033ம் ஆண்டு தொடங்கி 2035ம் ஆண்டு முடிகிறது. அப்போது கூடுதலாக 3 கோடி பயணிகள் என மொத்தம் 5 கோடி பயணிகளை கையாள முடியும். 3ம் கட்ட பணிகள் 2042ம் ஆண்டு முடியும் போது மொத்தம் 7 கோடி பயணிகளும், இறுதி கட்ட பணிகள் 2046ம் ஆண்டு முடிக்கும் போது மொத்தம் 10 கோடி பயணிகளையும் கையாள முடியும்.

### சென்னையிலும் தொடரும்

அதில் முதல்கட்ட பணிகள் முடிக்கப்படும் 2028ம் ஆண்டில் இருந்து விமானங்கள் இங்கு இயக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. பரந்தூரில் விமான நிலையம் செயல்பட்டாலும், சென்னையில் தற்போது உள்ள விமான நிலையமும் தொடர்ந்து செயல்படும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். இந்த விமான நிலையத்தின் முழு திட்ட அறிக்கையை தனியார் நிறுவனம் ஒன்று தயாரித்து அதனை தமிழக அரசிடம் தற்போது ஒப்படைத்துள்ளது.

தமிழக அரசின் அனுமதி கிடைத்தவுடன், இந்த அறிக்கை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு இறுதி அனுமதி பெறப்படும் இந்த விமான நிலையம் அமையும் இடத்தில் உள்ள 1005 குடும்பங்கள் மற்றும் 36 ஆயிரத்து 635 மரங்கள் அங்கிருந்து அகற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிற மாநிலங்களுக்கு ரூ.35,125 கோடி ஒதுக்கீடு: சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு மத்திய அரசு ஒரு பைசா கூட வழங்கவில்லை

**நாடாளுமன்றத்தில் மத்திய அமைச்சர் தகவல்**

**தமிழக அரசே நிதியை செலவு செய்து பணிகளை மேற்கொள்கிறது**

**சென்னை, ஆக. 9– இந்தியாவில் பிற மாநிலங்களில் நடைபெறும் மெட்ரோ ரெயில் திட்டங்களுக்கு ரூ.35 ஆயிரத்து 125 கோடி நிதி ஒதுக்கி உள்ளது. ஆனால் சென்னை மெட்ரோ திட்டத்திற்கு ஒரு பைசா கூட வழங்கவில்லை. 'பூஜ்ஜியம்' நிதி ஒதுக்கி உள்ளதாக நாடாளுமன்றத்தில் மத்திய அரசு கூறியுள்ளது.**

சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்க கடந்த 2009 ம் ஆண்டு அப்போது துணை முதல மைச்சராக இருந்த மு.க. ஸ்டாலின் சென்னையில் மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். அதன்படி முதல் கட்ட மெட்ரோ ரெயில் பணிகள் திருவொற்றியூர் விம்கோ நகர் முதல் விமான நிலையம் வரையும், சென்டிரல் முதல் பரங்கிமலை வரையும் தொடங்கப்பட்டது. தற்போது இந்த வழித்தடத்தில் மெட்ரோ ரெயில் சேவை முழு வீச்சில் நடந்து வருகிறது.

அதனைத்தொடர்ந்து 2ம் கட்டமாக மாதவரம் முதல் சோழிங்கநல்லூர், கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி, மாதவரம் முதல் சிறுசேரி சிப்காட் வரையிலான தூரத்திற்கு பணிகள் நடந்து வருகிறது. அதற்கான திட்ட மதிப்பீடு மட்டும் ரூ.63 ஆயிரத்து 246 கோடி ஆகும்.

இந்த திட்டப்பணிகளுக்கு மத்திய அமைச்சர் அமித்ஷா, எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்தபோது கடந்த 2021ம் ஆண்டு அடிக்கல் நாட்டினார். இந்த பணிகள் தற்போது தீவிரமாக நடந்து வருகிறது. ஆனால் இதுவரை இந்த திட்டத்திற்கு மத்திய அரசு தனது பங்களிப்பு தொகையை வழங்கவில்லை. இருப்பினும் திட்டப்பணிகள் நின்று விடக்கூடாது என்பதற்காக தமிழக அரசு அதற்கான நிதியை செலவு செய்து பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தற்போதைய மத்திய பட்ஜெட்டில் சென்னை மெட்ரோவின் 2ம் மற்றும் 3ம் கட்ட பணிகளுக்கு நிதி ஒதுக்க வேண்டும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மத்திய நிதி மந்திரிக்கு கோரிக்கை வைத்தார். ஆனால் பட்ஜெட்டில் மத்திய அரசு நிதி ஒதுக்கவில்லை. அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மத்திய அரசின் நிதி ஆயோக் கூட்டத்திலும் கலந்து கொள்ள மாட்டேன் என்று கூறி புறக்கணித்தார்.

### பிற மாநிலங்களுக்கு தாராள நிதி

இந்த நிலையில் தமிழக மெட்ரோ திட்டத்திற்கு நிதி ஒதுக்காத மத்திய அரசு பிற மாநிலங்களில் நடக்கும் மெட்ரோ திட்டங்களுக்கு மட்டும் தாராளமாக நிதி வழங்கி உள்ளது. ஆனால் தமிழகத்திற்கு கடந்த 2 ஆண்டுகளாக மெட்ரோ திட்டங்களுக்கு எந்த நிதியும் வழங்கவில்லை என்பதனை மத்திய அரசு நேற்று நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டு உள்ளது.

தி.மு.க.வின் மத்திய சென்னை எம்.பி. தயாநிதி மாறன் சென்னை மெட்ரோ திட்டம் குறித்தும், பிற மாநிலங்களில் செயல்படும் மெட்ரோ திட்டங்களுக்கு மத்திய அரசு ஒதுக்கிய நிதி விவரம் குறித்து கேள்வி எழுப்பினார். அதற்கு மத்திய வீட்டு வசதி மற்றும் ஊரகத்துறை இணை மந்திரி தோக்கன்சாகு எழுத்துபூர்வமாக பதில் அளித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

தமிழகம் உள்பட 8 மாநிலங்கள் மற்றும் டெல்லியில் மெட்ரோ ரெயில் திட்ட பணிகள் நடந்து வருகிறது. அதற்காக கடந்த 2 ஆண்டுகளில் இந்த மாநிலங்களுக்கு மத்திய அரசு ரூ.35 ஆயிரத்து 125 கோடி நிதி வழங்கியுள்ளது. அதில் கர்நாடகாவிற்கு ரூ.7,658 கோடி, மராட்டியத்திற்கு ரூ.6,958 கோடி, குஜராத்துக்கு ரூ.6,557 கோடி, டெல்லிக்கு ரூ.5,925 கோடி, உத்தரபிரதேசத்திற்கு ரூ.4,542 கோடி, மத்திய பிரதேசத்திற்கு ரூ.2,196 கோடி, பீகாருக்கு ரூ.1,138 கோடி, கேரளாவிற்கு ரூ.146 கோடி ஒதுக்கியுள்ளது.

ஆனால் தமிழகத்தில் நடைபெறும் சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் மற்றும் மேற்கு வங்காளத்தின் கொல்கத்தா நகரில் நடைபெறும் மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு ஒரு பைசா வழங்கவில்லை. 'பூஜ்ஜியம்' நிதி வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

மேலும் அதில் சென்னை மெட்ரோ 2ம் கட்ட பணிகள் குறித்த கேள்விக்கு மத்திய அரசு, தமிழக அரசு சென்னை மெட்ரோ 2ம் கட்ட திட்டத்தை 118.9 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.63 கோடியே 246 கோடி செலவில் நிறைவேற்ற அறிக்கை கொடுத்துள்ளது. இதுபோன்ற அதிகபட்ச நிதி ஒதுக்கிடு திட்டங்களுக்கு ஒப்புதல் தருவதற்கு திட்டத்திற்கான சாத்தியக்கூறு மற்றும் தேவையான வளங்கள் இருக்க வேண்டும்.

தற்போதைய நிலையில் சென்னை மெட்ரோ 2ம் கட்ட பணிகளை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. மேலும் அதற்கான செலவினத்தை தமிழக அரசே சுமந்து உள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது. மத்திய அரசின் இந்த பதிலால், அதிர்ச்சி அடைந்த தமிழக எம்.பி.க்கள் மற்ற மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவது தவறில்லை. ஆனால் மத்திய அரசுக்கு அதிக வருவாய் தருவதில் 2ம் இடத்தில் இருக்கும் தமிழகத்துக்கு மட்டும் நிதி ஒதுக்குவதில் ஏன் பாரபட்சம் காட்டப்படுகிறது? என்று கேள்வி எழுப்பி உள்ளனர்.

சென்னையில் 2ம் கட்ட மெட்ரோ திட்டத்திற்கு நிதி வழங்காத மத்திய அரசு 3ம் கட்ட திட்டத்திற்கும் இன்னும் முழுமையான ஒப்புதல் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சென்னை 3ம் கட்ட திட்டம் பூந்தமல்லியில் இருந்து பரந்தூர் வரையும், கோயம்பேட்டில் இருந்து ஆவடி வரையும், மீனம்பாக்கத்தில் இருந்து பூந்தமல்லி வரையும் செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**புவி கண்காணிப்புக்காக இ.ஓ.எஸ் 08 செயற்கைகோளுடன்**

# எஸ்.எஸ்.எல்.வி. டி–3 ராக்கெட் 15–ந்தேதி விண்ணில் ஏவப்படும்: இஸ்ரோ தகவல்

**சென்னை, ஆக.9– எஸ்.எஸ்.எல்.வி. டி3 ராக்கெட் மூலம் இ.ஓ.எஸ் – 08 என்ற அதிநவீன புவி கண்காணிப்பு செயற்கைகோளை வருகிற 15ம் தேதி விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.**

செயற்கைகோளை விஞ்ஞானிகள் வடிவமைத்து உள்ளனர்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) பி.எஸ்.எல்.வி., ஜி.எஸ்.எல்.வி. மற்றும் சிறிய ரக செயற்கைகோளை விண்ணுக்கு அனுப்ப உதவும் எஸ்.எஸ்.எல்.வி. ரக ராக்கெட்டுகளை தயாரித்து அவற்றில் செயற்கைகோள்களை பொருத்தி விண்ணில் ஏவி வருகிறது. அந்த வகையில் தற்போது புவி கண்காணிப்பிற்காக 175.5 கிலோ எடை கொண்ட அதிநவீன மேம்படுத்தப்பட்ட இ.ஓ.எஸ் 08 என்ற செயற்கைகோளை ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் பல்வேறு கட்ட சோதனைகளை செய்து வருகின்றனர். இந்த செயற்கை கோளை எஸ்.எஸ்.எல்.வி டி3 ராக்கெட் மூலம் வருகிற 15ம் தேதி காலை 9.17 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட உள்ளது. குறைந்த எடை கொண்ட மைக்ரோ வகையை சேர்ந்த இந்த செயற்கைகோள் பூமியில் இருந்து 475 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள குறைந்த புவிவட்ட சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப்படுகிறது. இதனுடைய ஆயுட்காலம் 1 ஆண்டுகள் ஆகும். இந்த செயற்கைகோளில், எலக்ட்ரோ ஆப்டிக்கல் இன்பிராரெட் பேலோடு (இ.ஓ.ஐ.ஆர்.), குளோபல் நேவிகேஷன் சாட்டிலைட் சிஸ்டம் ரிப்ளக்டோமெட்ரி பேலோட் (ஜி.என்.எஸ்.எஸ்.ஆர்) மற்றும் எஸ்.ஐ சி யுவி டோசிமீட்டர் ஆகிய 3 ஆய்வு கருவிகளம் இதில் இடம் பெற்றுள்ளது.

புதிதாக வடிவமைக்கப்பட்ட எஸ்.எஸ்.எல்.வி. ரக ராக்கெட்டுகளின் திட்டத்தை மேம்படுத்தப்பட்ட இந்த ஏவுதல் மூலம் நிறைவேற்றப்படுகிறது. அத்துடன், இந்திய தொழில்துறை மற்றும் என்.எஸ்.ஐ.எல். நிறுவனத்தின் செயல்பாட்டு பணியையும் இந்த செயற்கைகோள் செயல்படுத்துகிறது. இந்த ராக்கெட்டுக்கான இறுதிக் கட்டப்பணியான கவுண்ட்டவுன் வருகிற 14ம் தேதி தொடங்குகிறது.


kotak Kotak Mahindra Bank

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

**கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006.
லேண்ட் மார்க்: எம்ஜி கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)-ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு. பிள்ளபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி "பிள்ளபிசச்ஸல்" என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 18.11.2019 அன்று பிள்ளபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனி "பிள்ளபிசச்ஸல்" என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.HOU/CHE/0717/408845ன் கீழ், கீழே உள்ள விவரங்களின்படி திரு. ஜெ. புஷ்பராஜன் மற்றும் திருமதி. ஜெயந்தி பி ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 23.05.2019 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.26,25,913.09/–(ரூபாய் இருபத்தாறு லட்சத்து இருபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து பதிமூன்று மற்றும் ஒன்பது பைசா மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்" வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

| விவரங்கள் | விவரங்கள் |
|---|---|
| ஏலத் தேதி | 29.08.2024 |
| ஏலம் நடைபெறும் நேரம் | மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன் |
| ரிசர்வ் விலை | ரூ.4,00,000/- (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) |
| டேவனித் தொகை டெபாசிட் (EMD) | ரூ.40,000/- (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) |
| Kyc உடன் Emd ஐ சமர்ப்பிப் பதற்கான கடைசி தேதி | 28.08.2024 அன்று மாலை 5:00 மணி வரை (இந்திய நேரப்படி) |
| ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் | சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், காலி வீட்டு மனை. மனை எண்.48, விஸ்தீரணம் 554 சதுர அடி, காஞ்சீபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, பண்ருட்டி கிராமத்தில் உள்ள பீனிக்ஸ் சிட்டி சர்வே எண்.224/6 பட்டா எண்கள்:573 DTCP.NO.LP/DDTCP(CR) எண்.54/2016 தேதி 20.04.2016 மற்றும் மனை எண்.48, எல்லைகள் : வடக்கு : மனை எண்.47, தெற்கு : மனை எண்.49, கிழக்கு : காலி நிலம், மேற்கு : 30 அடி சாலை மற்றும் விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம் : 30 அடி, 6 அங்குலம், கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம் : 31 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம் : 18 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம் : 18 அடி மற்றும் இந்த சொத்தானது சென்னை பதிவு மாவட்டம் மற்றும் வலாஜாபாத் சார் பதிவு மாவட்டம் மற்றும் பண்ருட்டி பஞ்சாயத்து எல்லை மற்றும் ஸ்ரீபெரும்புதூர் பஞ்சாயத்து யூனியன் எல்லையில் உள்ளது. |

தெரிந்தவரை விலைமங்கள் : இல்லை

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் திரு. ஷிபாம் நம்பூரி (+91 9677288418) & திரு. வேல்முருகன் கதிர்வேல் (+91 9152219751). ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR எண் (+919152219751) ஐ தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி: 09.08.2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்



kotak Kotak Mahindra Bank

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

**கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006.
(லேண்ட் மார்க்: எம்ஜி கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்)

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)-ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு. பிள்ளபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி "பிள்ளபிசச்ஸல்" என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 14.11.2018 அன்று பிள்ளபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனி "பிள்ளபிசச்ஸல்" என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.HOU/CHE/1016/328919ன் கீழ்; கீழே உள்ள விவரங்களின்படி திரு. E. குமார் மற்றும் திருமதி.பேபி K ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 02.02.2018 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.25,56,317/–(ரூபாய் இருபத்தைந்து லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து முன்னூற்று பதினேழு மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்" வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

| விவரங்கள் | விவரங்கள் |
|---|---|
| ஏலத் தேதி | 28.08.2024 |
| ஏலம் நடைபெறும் நேரம் | மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன் |
| ரிசர்வ் விலை | ரூ.16,50,000/- (ரூபாய் பதினாறு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) |
| டேவனித் தொகை டெபாசிட் (EMD) | ரூ.1,65,000/- (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்தைந்தாயிரம் மட்டும்) |
| Kyc உடன் Emd ஐ சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 27.08.2024 அன்று மாலை 5:00 மணி வரை (இந்திய நேரப்படி) |
| ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் | **சொத்து அட்டவணை A:** சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். சர்வே எண்கள். 218/2, 223/5, 223/6, 223/7, 223/8, 223/9, 223/10, 223/11, 223/12, 223/13, 223/14, 223/15, 223/16, 223/17, 223/18, 223/19, 223/20, 224/1, 224/2A, 224/2B, 224/6, 224/7A1, 224/7A2, 224/78, 224/10, 224/11A, 224/11B, 224/11C, 224/12, 224/13A, 224/13B, 224/14, 224/15, 224/16, 224/20, 224/22, 224/23, 224/24, 224/27A, 224/27B, 224/24C, 224/27D, 227/28, 227/29, 227/30, "பீனிக்ஸ் நகரம்" என்ற பெயரில் வீட்டு மனையாக மாற்றப்பட்டது. எண்.127, பண்ருட்டி கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், வலாஜாபாத் சார் பதிவு மாவட்டத்தில் இந்த சொத்து உள்ளது. **சொத்து அட்டவணை B:** சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, பண்ருட்டி கிராமம், பீனிக்ஸ் சிட்டி, மனை எண்.536ல் உள்ள 2196 சதுர அடி வீட்டு மனை. சர்வே எண். 224/24, 27c, 27d, DTCP NO. LP/DDTCP(CR) No.54/2016 தேதியிடப்பட்டது, மனை.53. எல்லை: கிழக்கு: மனை எண்.52, மேற்கு: மனை எண்.54 & காலி மனை, வடக்கு: மனை எண்.61,62 & 63, தெற்கு : பஞ்சாயத்து சாலை மற்றும் விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம் 71 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம் 40 அடி 6 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில் 59 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில் 60 அடி 6 அங்குலம், மொத்தம் 2196 சதுர அடி நிலம் வலாஜாபாத் சார் பதிவு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் பதிவு மாவட்டத்தில் உள்ளது. |

தெரிந்தவரை விலைமங்கள் : இல்லை

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் திரு. ஷிபாம் நம்பூரி (+91 9677288418) & திரு. வேல்முருகன் கதிர்வேல் (+91 9152219751). ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR எண் (+919152219751) ஐ தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி: 08.08.2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்



**டபுள்டாட் பைனான்ஸ் லிமிடெட்**

CIN : U93090TN1989PLCO21901

பதிவு அலுவலகம்: எண். 645, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, 2வது தளம்,சென்னை — 600 006, தமிழ்நாடு

Contact no. 022 6130 9171

Email Id : ddfl_2002@yahoo.com / complianceatdoubledot@gmail.com

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்ள கம்பெனியின் 34வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) ஆகஸ்ட் 30, 2024, வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணிக்கு காணொலி காட்சி/பிற ஆடியோ காட்சி (OAVM) முறையில் நடைபெறும். கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம் வெளியிட்ட மே 5, 2020 மற்றும் ஏப்ரல் 8, 2020 மற்றும் ஏப்ரல் 13, 2020, ஜனவரி 13, 2021 மற்றும் மே 05, 2022 மற்றும் டிசம்பர் 28, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை (கூட்டாக எம்சிஏ சுற்றறிக்கைகள் என குறிப்பிடப்படும்) ஆகியவற்றின் கீழ், கம்பெனி/வைப்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பை